DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.120/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | திராவிட செல்வன் | Age | : | 61 |
| F/N | : | முத்து இருளாண்டி | Occupation | : | ஓட்டுநர் (ஓய்வு) |
| Village | : | செந்தமிழ் நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 21st day of February 2024.

**21.02.2024**

**(1வது மற்றும் 2வது எதிரிகள் ஆஜர். 3 முதல் 5வது எதிரிகள் ஆஜராகவில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).)**

**(சாட்சி குவிமுச பிரிவு 311ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. கடந்த 24.05.2018ம் தேதி நான் 1வது எதிரியின் தங்கையை தாக்கியதாக என் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு விசாரணை கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கு தீர்ப்பின் மீது மேல்முறையீடு வழக்கு இராமநாதபுரம் மாண்புமிகு கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அறிவிப்பு வந்துள்ளது நான் ஆஜராகவில்லை. எனக்கு பாத்தியப்பட்ட சொத்து கம்பர் தெருவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பே நான் செந்தமிழ் நகரில் தான் குடியிருந்து வருகிறேன். கம்பர் தெருவிற்கும், செந்தமிழ் நகருக்கும் இடையே சுமார் 6 கி.மீ தொலைவு இருக்கும். கம்பர் தெருவில் உள்ள வீடு எனது மனைவி பெயரில் உள்ளது. கம்பர் தெருவில் உள்ள வீட்டை விற்பதாக சொல்லி 1வது எதிரிக்கு எனது மனைவி கடந்த 18.11.2016ம் தேதி ஒரு ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்த பத்திரத்தின்படி நாங்கள் நடந்து கொள்ளாததால் 1வது எதிரி எங்கள் மீது கேணிக்கரை காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றால் சரிதான்.

2. நான் மேற்படி இடத்தை அதன் பிறகு எழுதி கொடுத்துவிட்டேன். வீட்டை 1வது எதிரிக்கு எழுதி கொடுத்த பின்பு அந்த வீட்டிற்கும், எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். சம்பவமானது அந்த வீட்டில் தான் நடந்தது என்றால் சரிதான். காயம்பட்ட அன்று எத்தனை மணிக்கு எங்கு வைத்து போலீசாரை நான் பார்த்தேன் என்றால் மருத்துவமனையில் வைத்து மாலை சுமார் 06.45 மணிக்கு பார்த்தேன். மருத்துவமனையில் போலீசார் என்னை பார்க்கும்போது என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் எனது மனைவியும், சின்னமகனும் இருந்தார்கள். வேறு யாரும் இல்லை. நான் மருத்துவமனையில் சேர்ந்து 10, 15 நிமிடங்களில் போலீசார் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள் என்றால் மாலையில் தான் வந்தார்கள்.

3. நான் மருத்துவரிடம் எப்படி காயம்பட்டது, யாரால் காயம்பட்டது என்பதை பற்றி

சொன்னேனா என்றால் சொன்னேன். இரத்தம் படிந்த சட்டையை போலீசார் பார்க்கவில்லை. நான் இரத்தம் படிந்த சட்டையுடனும், இரத்தம் வழிந்த கொண்டிருந்த நிலையிலும் தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். இரத்தம் படிந்த சட்டையை மருத்துவமனையில் மாற்றி கொண்டேனா என்றால் மாற்றி கொண்டேன். புது மட்டையை வீட்டில் இருந்து கொண்டு வந்தார்கள், நான் மாற்றி கொண்டேன். இரத்தம் படிந்த சட்டையை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை ஆனால் காண்பித்தேன். நான் மருத்துவரிடம் தலையில் இருந்த காயத்தை மட்டும் தான் காண்பித்தேன் என்றால் சரிதான்.

4. எனக்கு உடல் முழுவதும் காயங்கள் இருந்தது என்றால் எனக்கு உடலில் காயம் இல்லை. எனக்கு காயம் என்றால் என்னவென்று தெரியும். புகார் வாக்குமூலத்தில் எனக்கு முதுகு மற்றும் மார்பில் வீக்க காயம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எதிரிகள் அனைவரும் செங்கல் கல்லை கொண்டு எறிந்தபோது காயங்கள் ஏற்பட்டது என்றும், நான் மற்ற எதிரிகளிடம் பேசி கொண்டிருந்தபோது சுப்பிரமணியன் குழவிக்கல்லை எடுத்து தேவுடியா பயலே என்று சொல்லி இங்க ஏண்டா வந்திருக்கிற என்று சொல்லி குழவிக்கல்லால் அடித்தார் என்று சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். குழவிக்கல் ஒரு ஜான் அளவு இருந்தது. சுப்பிரமணியன் என்னை ஓங்கி குழவிக்கல்லால் அடித்தார் என்றால் சரிதான். அதில் தான் எனக்கு உச்சந்தலையில் காயம் ஏற்பட்டது. குழவிக்கல்லை எறிந்தார் என்று சொன்னால் சாட்சி தற்போது எதிரி குழவிக்கல்லை எறிந்தார் என்று சொல்கிறார்.

5. மருத்துவமனைக்கு குழவிக்கல்லை எடுத்து செல்லவில்லை வீட்டில் பத்திரமாக எடுத்து வைத்திருக்கிறேன். குழவிக்கல்லை நான் போலீசாரிடம் காண்பிக்கவும் இல்லை, ஒப்படைக்கவும் இல்லை. எனக்கு நடு உச்சி மண்டையில் காயம் ஏற்பட்டது. நேருக்கு நேர் நின்று 3 ல் இருந்து 4 அடி தொலைவில் இருந்து குழவிக்கல்லை சுப்பிரமணியன் எறிந்தார். 3 அடி தொலைவில் இருந்து குழவிக்கல்லை எறிந்தால் வழக்கில் சொன்னவாறு எனக்கு காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று எனக்கு மட்டும் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவத்தின்போது என்னுடன் சங்கர் மற்றும் மகேஸ்வரன் இருந்தார்கள். எவ்வளவு நேரம் எங்களுக்குள் சண்டை நடந்தது என்றால் 10 நிமிடங்கள் நடந்தது. என்னுடன் எனது குடும்பத்தார் யாரும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். 2016 ம் ஆண்டு ஒரு ஒப்பந்த பத்திரம் 1வது எதிரியின் தங்கைக்கு எழுதி கொடுத்துவிட்டு இந்த வழக்கு தொடுப்பதற்கு நான்கு நாட்கள் வரை பதிவு செய்து கொடுக்கவில்லை என்றாலும், அதற்கு முன்பு கேணிக்கரை காவல் நிலையத்தில் 1வது எதிரி புகார் கொடுத்தார் என்றாலும், அவர்கள் கண்டித்ததின் அடிப்படையில் தான் 21.05.2018 ம் தேதி கிரையம் எழுதி கொடுத்தோம் என்றாலும் சரியல்ல.

6. கிரையம் ஏற்படுத்தி கொடுத்த பின்பு எனக்கு சம்மந்தம் இல்லாத இடத்திற்கு நான் வலிய சென்று செப்டிக் டேங்கை உடைத்து அந்த மனித கழிவுகளை 1வது எதிரியின் வீட்டிற்கு முன்பு பரவவைத்து நான் தான் 1வது எதிரியின் தங்கை மாரியை தாக்கினேன் என்றாலும், அதற்கு என் மீது குற்ற எண்.125/2018 ன் கீழ் கேணிக்கரை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும், அதை ஈடு செய்வதற்காக நான் எதிரிகள் மீது இந்த வழக்கை பொய்யாக தொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் எங்கள் இடத்தில் தான் மண் அள்ளி போட்டேன். போலீசார்

விசாரணையில் சம்பவ இடத்திற்கு அருகே எனக்கு இடம் உள்ளது என்று சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சம்பவ இடத்திற்கு அருகே உள்ள எனது இடத்திற்கான ஆவணத்தை போலீசாரிடம் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் பிரச்சனை செய்ததால் அக்கம் பக்கத்தினர் என்னை அடித்து விலக்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதில் தான் எனக்கு காயங்கள் ஏற்பட்டன என்றால் சரியல்ல. அந்த காயத்தை வைத்து இந்த வழக்கை எதிரிகள் மீது பொய்யாக தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.120/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | மகேஸ்வரன் | Age | : | 41 |
| F/N | : | கோபால் | Occupation | : | எலெட்ரீசியன் |
| Village | : | பகவதியம்மன் கோவில் தெரு | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 21st day of February 2024.

**21.02.2024**

**(1வது மற்றும் 2வது எதிரிகள் ஆஜர். 3 முதல் 5வது எதிரிகள் ஆஜராகவில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).)**

**(சாட்சி குவிமுச பிரிவு 311ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. கம்பர் தெருவிற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் எனது மாமியாரின் வீடு கம்பர் தெருவில் உள்ளது. எனது மாமியாரின் பெயர் ஜெயா ஆகும். சம்பவ இடத்தில் இருந்து எனது மாமியாரின் வீடு வடக்கு திசையில் 30 அடி தூரத்தில் உள்ளது. நான் மாமியார் வீட்டிற்கு வந்திருந்தபோது தான்சம்பவத்தை பார்த்தேன் என்றால் இல்லை கேள்விபட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன். கம்பர் தெருவிற்கும், பகவதியம்மன் கோவில் தெருவிற்கும் இடையே சுமார் 400 மீ தூரம் இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு வரும்போது அ.சா.1 இரத்தக்காயத்துடன் இருந்தார் என்றால் சரியல்ல. எனக்கு யார் தகவல் சொன்னது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. எத்தனை மணிக்கு தகவல் வந்தது என்றால் மாலை 07.00 மணிக்கு தகவல் வந்தது சாட்சி தற்போது மாற்றி காலை 07.00 மணிக்கு தகவல் வந்ததாக சொல்கிறார். மேற்படி தகவலை எனது வீட்டிற்கு வந்து சொன்னார்கள். சம்பவ இடத்தில் எனது மாமியார் இருந்தார். எனது மனைவி சம்பவ இடத்திற்கு வரவில்லை.

2. நான் சம்பவ இடத்திற்கு போகும்போது எதிரிகளுக்கும், அ.சா.1க்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கொண்டிருந்தது என்றால் சரிதான். வாக்குவாதம் எவ்வளவு நேரத்திற்கு முன்பு தொடங்கியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2016ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த பத்திரத்தை பற்றி எனக்கு தெரியும். அ.சா.1 ஒப்பந்தத்தின்படி நிலத்தை விற்காததால் தான் மேற்படி வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். ஒப்பந்தத்தின்படி அ.சா.1 40 லட்சத்தை முன்பணமாக வாங்கி கொண்டு வீட்டை எழுதி கொடுக்காததால் தான் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். விற்ற பிறகு ஏன் எனது வீட்டிற்கு வருகிறாய் என்பது தான் அவர்களுக்குள் இருந்த பிரச்சனை என்றால் சரிதான். நான் சண்டையை சமரசம் செய்தேன். அப்படி சமரசம் செய்யும்போது தான் கல் எறியப்பட்டது என்றால் சரிதான்.

3. நான் எதிரிகளுக்கும், அ.சா.1 க்கும் இடையே நின்று கொண்டு சண்டையை சமரசம் செய்தேன் என்றால் சரிதான். இரண்டு தரப்பினரும் கல் எறிந்தார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 னுடன் யார் யார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனது தாய் மாமா ஆவார். கல் எறிந்ததால் எனது மாமாவிற்கு காயங்கள் ஏற்பட்டன என்றால் சரிதான். யார் யார் எந்தெந்த கற்களை எறிந்தார்கள் என்பதை பற்றியும், அதனால் எந்தெந்த இடத்தில் காயங்கள் ஏற்பட்டது என்பதை பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 க்கு முதுகு, நெஞ்சு, கன்னம், தோள்பட்டை, தலை ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டன என்றால் சரிதான். அ.சா.1 க்கு இரத்தம் வந்ததா என்றால் வந்தது. நான் தான் அ.சா.1 ஐ இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அவர் அணிந்திருந்த சட்டையின் பின்பகுதியில் பாதி சட்டையில் மட்டும் தான் இரத்தகரை இருந்தது. நாங்கள் மருத்துவமனைக்கு சென்றவுடன் போலீசார் கொஞ்ச நேரத்தில் அங்கு வந்துவிட்டார்கள் நேரம் சரியாக ஞாபகம் இல்லை. போலீசார் விசாரிக்கும்போது நான் இருந்தேன். அப்போது என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

4. அ.சா.1 ஐ விசாரித்து எழுதி கொண்ட ஆவணத்தில் நானும் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்கள் அனைத்தும் பொய் என்றாலும், சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது என்றாலும், சம்பவத்தை பற்றி கேள்விபட்டு நான் மருத்துவமனையில் வைத்து தான் அ.சா.1 ஐ பார்த்தேன் என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகே நிறைய வீடுகள் உள்ளன என்றால் சரிதான். சண்டையை நிறைய நபர்கள் பார்த்தார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் 1 வது எதிரி அ.சா.1 ஐ பார்த்து இந்த இடத்தை விற்றுவிட்டாய் எதற்குடா வந்தாய் என்று சொல்லி அடித்தார் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது அருகில் நின்று கொண்டு தான் சங்கர் சண்டையை விலக்கிவிட்டார் என்றால் சரிதான். எனக்கும், சங்கருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். கல் எறிந்தது சுமார் 4 நிமிடங்கள் நடந்திருக்கும் என்றால் சரிதான். அ.சா.1 எனது மாமா என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.120/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | சங்கர் | Age | : | 33 |
| F/N | : | நாகேஸ்வரன் | Occupation | : | அலுமினிய கிளாஸ் கடை வைத்துள்ளேன் |
| Village | : | கம்பர் தெரு | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 21st day of February 2024.

**21.02.2024**

**(1வது மற்றும் 2வது எதிரிகள் ஆஜர். 3 முதல் 5வது எதிரிகள் ஆஜராகவில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).)**

**(சாட்சி குவிமுச பிரிவு 311ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1ன் மகன் அறிவுநிதி எனது நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் நான் என் வீட்டிற்கு முன்பு நின்று கொண்டிருந்தபோது சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன் என்றும், அப்போது எதிரிகளுக்கும், அ.சா.1 க்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், அப்போது 1வது எதிரி பைக்கில் வந்தார் என்றும், அவர் குழவிக்கல்லை எடுத்து அ.சா.1ன். உச்சந்தலையில் அடித்தார் என்றும் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து என்னுடைய வீடு சுமார் 100 மீ தொலைவில் வடக்கு திசையில் உள்ளது. கம்பர் தெரு என்பது நேர் தெரு என்றாலும், அந்த தெருவில் இருபுறமும் வீடுகள் உள்ளன என்றாலும் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே யார் யார் குடியிருந்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். லெட்சுமி என்பவரது வீடு சம்பவ இடத்தில் இருந்து கிழக்கு திசையில் எதிரே உள்ளது. லெட்சுமி வீட்டிலிருந்து நேர் வடக்கு திசையில் 100 மீ தள்ளி எனது வீடு உள்ளது. லெட்சுமி வீட்டிற்கு அடுத்து செய்யது அம்மாள் பள்ளிக்கு செல்லும் சாலை உள்ளது என்றால் 200 மீ தள்ளி உள்ளது. அதற்கு இடையே நிறைய வீடுகள் உள்ளன என்றால் சரிதான். செய்யது அம்மாள் பள்ளிக்கு செல்லும் சாலைக்கும், சம்பவ இடத்திற்கும் இடையே தான் எனது வீடு உள்ளது.

2. எனது வீடு மேற்படி இடத்தில் இல்லை என்றாலும், வசந்தம் நகரில் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. எனது வீட்டிலிருந்து சம்பவ இடம் தெரியாது என்றாலும், சம்பவ இடத்தில் என்ன நடந்தாலும் கேட்காது என்றாலும் கேட்கும், ஆனால் பார்க்க முடியாது. என்னுடைய வீடு சந்துக்குள் உள்ளது என்றால் சரிதான். சண்டை எவ்வளவு நேரமாக நடக்கிறது என்பதை பற்றியும், யார் யார் சண்டையில் இருந்தார்கள் என்பதை பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சென்ற பிறகு 1வது எதிரி

பைக்கில் வந்து அவர் மட்டும் தான் அ.சா.1ஐ அடித்து காயப்படுத்தினார் என்றால் சரிதான். 1வது எதிரி 4 அடி தொலைவில் இருந்து கல்லை எறிந்தார். 1வது எதிரி பைக்கில் இருந்து இறங்கி வந்து கல்லை எடுத்து அ.சா.1ஐ அடித்ததை தான் நான் பார்த்தேன் என்றால் சரிதான்.

3. மேற்படி விபரத்தை தான் நான் போலீசாரிடமும் சொன்னேன். நான் சம்பவ இடத்திற்கு சென்று நிற்கும் போது தான் 1வது எதிரி சம்பவ இடத்திற்கு பைக்கில் வந்தார். 1வது எதிரி சம்பவ இடத்திற்கு வந்து இரண்டு நிமிடங்களில் சண்டை முடிந்துவிட்டது. நான் சண்டையை விலக்கிவிடவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தையே தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். 1வது எதிரி கல்லை அ.சா.1ன் மீது எறிந்ததை மட்டும் தான் பார்த்தேன். மற்ற எதிரிகள் கல் எறிந்ததை நான் பார்க்கவில்லை. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. வழக்கு சம்மந்தமாக மறுநாள் என்னை போலீசார் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். சம்பவத்தின்போது அக்கம் பக்கத்தினர் சம்பவ இடத்தில் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் எதையும் பார்க்கவில்லை என்றாலும், அ.சா.1ன் மகன் எனது நண்பர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**